**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 42/2020**

**வா.சா.1 – கதிரேசன்**

**13–03–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 7 முதல் 12 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் வயது என்ன என்றால் 46. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் பனியன் கம்பனி நடத்தி தொழில் செய்து வருகிறேன். தாவா சொத்து 3.27 ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 3.27 ஏக்கரும் ஒரு இணமாக ஒன்றாக உள்ளது என்றால் சரிதான். 3.27 ஏக்கருக்கு நேர் வடபுறம் பெரிய ஆழமாக பாறைக்குழி உள்ளது என்றால் சரிதான். 3.27 ஏக்கரில் வடபுற எல்லையில் கிழமேல் நீளியாக பெரிய காம்பவுண்டு சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காம்பவுண்டு சுவரை நஞ்சப்பன், சந்திரசேகரன் அவர்கள் தான் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல, பாறைக்குழி ஆழமாக இருந்ததால் நாங்கள் சொன்னதன் அடிப்படையில் பாறைக்குழி காரர்கள் ஏற்படுத்தியது.

2. 3.27 ஏக்கரில் வடபுறத்தில் கிழமேலாக அந்த பூமியிலேயே ஏற்ப்படுதியுள்ள காரணத்தினால் அந்த பூமிக்கு சம்பந்தமில்லாத வடபுறத்து பாறைக்குழி காரர்கள் காம்பவுண்டு சுவர் எழுப்பியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும், அதனை பொது அதிகார ஆவணம் பெற்றுள்ள நஞ்சப்பன் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர்கள் தான் எழுப்பினார்கள் என்றால் சரியல்ல. பாறைக்குழி காரர்கள் காம்பவுண்டு சுவரை ஏற்படுத்தி இருந்தால் அவர்களது தென்புற எல்லையில் தான் ஏற்படுத்தி இருப்பார்கள் என்றால் சரியல்ல, பாறைக்குழி காரர்கள் அவர்களது பூமி முழுவதும் குழியாக இருந்ததால் நாங்கள் அனுமதி அளித்ததன் பெயரில் காம்பவுண்டு சுவரை பாதுகாப்பிற்காக ஏற்படுத்தி கொடுத்தார்கள்.

3. காம்பவுண்டு சுவரை ஏற்படுத்தி கொடுப்பதற்கு அனுமதி அளிப்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்பதால் நான் அனுமதி அளித்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் சுவாதீன அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் நாங்கள் தான் உள்ளோம். நான் சுவதீனத்தில் உள்ளதாக பொய் சொல்கிறேன் என்றும், பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த இடத்தில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது அய்யாவின் அனுபவத்தில் இருந்ததாகவும், அதன் பிறகு பவர் கொடுத்ததாகவும் வழக்குரையில் உள்ளது.

4. வாதிகளின் சுவாதீனத்தின் உள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா அனுவபத்தில் உள்ளதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றும், எனது அப்பாவின் அப்பா வேலப்பன் அனுபவத்தில் இருந்ததாக மட்டும் தான் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் சுவாதீன அனுபவத்தில் உள்ளதாக நான் சொல்லாத நிலையில் சுவாதீனத்தில் உள்ளதாக சாட்சியம் அளிப்பதற்கு சட்டப்படி எனக்கு அனுமதி இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரையப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அடங்கலோ அல்லது வேறு சுவாதீன ஆவணங்களோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடங்கல் தாக்கல் செய்யவில்லை. அடங்கல் எங்கள் பெயரில் இல்லை என்றால் முன்பு இருந்தது, வழக்கு தாக்கல் செய்தபோது அழித்துவிட்டார்கள்.

5. நான் சுவாதீனத்தில் இல்லாததால்தான் அடங்கல் என் பெயரில் இல்லை என்றும், அதனால்தான் என்னால் அடங்கல் தாக்கல் செய்ய

இயலவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் பொது அதிகாரப்பத்திரம் 04.03.1996 ல் எழுதப்பட்டதாக சொல்லியுள்ளேன். யார் யாருக்கு எழுதி கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் 1, 2 வாதிகள் அவரது வாரிசுகளும் நஞ்சப்பனுக்கும், சந்திரசேகருக்கும் எழுதி கொடுத்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் பொது அதிகாரப் பத்திரம் என்றால் சரிதான். **04.03.1996 ம் தேதியிட்ட ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது**. பொது அதிகாரப்பத்திரத்தில் எந்த காரணத்திற்காக ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் கிரைய ஒப்பந்தம், கிரையம் மற்றும் இதர ஆவணங்கள் ஏற்படுத்தலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

6. பொது அதிகாரப்பத்திரம் பதிவு செய்ததற்கு பின்னிட்டு அதன் அடிப்படையில் கிரையம் ஆவணம் அல்லது வேறு ஆவணமும் எதுவும் பதிவு செய்யக்கூடாது என்று சார் பதிவாளர் அலுவலகத்தில் தடங்கள் மனு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கரை பத்தி 10 ல் பொது அதிகாரப்பத்திர சட்டப்படி செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்கவில்லை. பொது அதிகார ஆவணம் பொறுத்து தனியாக விளம்புகை பரிகாரம் கேட்காத நிலையில் பொது அதிகார ஆவணத்தின் உண்மை தன்மையை கேட்க உரிமை இல்லை என்றால் பொது அதிகாரம் எழுதிக்கொடுத்த வேலப்பன் இறந்துவிட்டதால் அது சட்டப்படி செல்லாத ஆவணம் ஆகிவிட்டதால் பொது அதிகார ஆவணம் பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை.

7. வேலப்பன் இறந்துவிட்ட காரணத்தை குறிப்பிட்டு அதன் அடிப்படையிலும் பொது அதிகார ஆவணம் செல்லாது என்று கேட்கவில்லை என்றால் கேட்கவில்லை. எப்போது வேலப்பன் இறந்ததாக எனது வழக்கு என்றால் 16.01.2001 ம் தேதி வேலப்பன் இறந்துவிட்டார். அதுவரை பொது

அதிகார ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஒரு ஆவணமும் ஏற்ப்படுத்தவில்லை. வேலப்பன் உட்பட அவரது மகன்கள் சிவசாமி, நடராஜ், மகள்கள் சாந்தாமணி, பூங்கொடி ஆகியோர்கள் பொது அதிகாரப்பத்திரத்தை கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வேலப்பனை தவிர்த்து அவர்களது மகன்களோ அல்லது மகள்களோ பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் ஆவணம் பதிவு செய்யக்கூடாது என்று தடங்கள் மனு கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை.

8. எனது தந்தை வேலப்பன் மகன் சிவசாமி என்றால் சரிதான். சிவசாமி 2006ம் ஆண்டு இறந்துவிட்டார். வேலப்பனின் மனைவி கருணையம்மாள் 2010ம் ஆண்டு இறந்துவிட்டார். நடராஜ் 2011ல் இறக்கிறார் என்றால் சரிதான். சாந்தமணியும் பூங்கொடியும் 1, 2 வாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தின் படி முதல் கிரையம் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 2001ம் ஆண்டே டிசம்பர் மாதம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 2001 ஜெனவரி மாதம் வேலப்பன் இறக்கிறார், 2001 டிசம்பர் மாதம் 3 முதல் 6 பிரதிவாதிகளின் கிரையம் கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

9. 1996ல் வழங்கப்பட்ட பொது அதிகாரப்பத்திரம் 2001ம் ஆண்டு 3 முதல் 6 பிரதிவாதிகள் கிரையம் வாங்கும் வரை பொது அதிகாரம் ரத்து ஆவணம் மூலம் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் கூற்றுப்படி 3 முதல் 6 பிரதிவாதிகளின் கிரையத்தின்போது வேலப்பனின் மகன்களும், மகள்களும் உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது தந்தையும், சித்தப்பாவும் அந்த கிரையத்தை ஆட்சேபித்து வழக்கு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவர்களுக்கு தெரியாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. 3 முதல் 6 பிரதிவாதிகளின் கிரையப்பத்திரத்தில் பொது அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் செய்து கொடுப்பதாக உள்ளது என்றால் சரிதான்.

10. பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் பொது அதிகாரம் அளித்த நபர்களின் முகவர்கள் என்ற கோதாவில் 3 முதல் 6 பிரதிவாதிகளின் கிரையப்பத்திரத்தை அவர்கள் எழுதிக்கொடுத்துள்ளதால் மேற்படி கிரையம் அந்த சமையத்திலேயே எனது அப்பாவிற்கும், சித்தப்பாவிற்கும், 1, 2 வாதிகளுக்கும் தெரியும் என்றால் உள்ளூரில் கிரையம் பதிவு செய்யப்படாததால் அவர்களுக்கு தெரியவில்லை. கிரையம் அவர்களின் முகவர் செய்துள்ளதால் பவர் கொடுத்தவர்களுக்கு கிரையம் பற்றி தெரியும் என்பதுதான் சட்ட அனுமானம் என்றால் சரியல்ல. 3 முதல் 6 கிரையப்பத்திரத்தை படித்துப்பாத்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். அதில் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் முகவர்கள் அவ்வாறு சொல்லியுள்ளார்கள்.

11. சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு கிரையப்பத்திரம் அமல் படுத்தப்பட்டதால்தான் அவ்வாறு எழுதப்பட்டது என்றும், அதனை மறுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. கிரையப்பத்திரத்தை நான் சட்டப்படி செல்லத்தக்கது என்று விளம்புகை பரிகாரம் கோருவதாக இருந்திருந்தால் 2001ல் இருந்து 3 ஆண்டு காலத்திற்குள் அவ்வாறு பரிகாரம் கோரியிருக்கவேண்டும் என்றும், காலம் கடந்த இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அது காலவரைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் வேறு யாரும் உள்ளே வராததால் அந்த விபரம் தெரியவில்லை. எங்கள் அனுபவத்தில் இருத்தாலும் யாரும் வராததாலும் அது பற்றி தெரியவில்லை. எங்கள் அனுபவத்தில் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றும், அது 3 முதல் 6 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் இருந்தது என்றால் சரியல்ல.

12. 3 முதல் 6 பிரதிவாதிகள் சொத்தை கிரையம் பெற்ற பிறகு வருவாய் ஆவணங்கள் அவர்கள் பெயரில் மாறிவிட்டது என்றால் சரியல்ல. அதன்

பின்னிட்டு கிரையம்பெற்ற பிரதிவாதிகளின் பெயரில் பட்டா சிட்டா மாறிவிட்டது என்றால் நாங்கள் அது குறித்து பார்க்கும்போது மாறி இருந்ததது. வழக்கு தாக்கல் செய்தபோது பட்டாவை பார்த்திருப்பேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோது பிரதிவாதிகள் பெயரில் பட்டா இருந்தது என்றால் அதற்கு முன்பு எங்கள் தாத்தா வேலப்பன் பெயரில் இருந்தது, வழக்கு தாக்கல் செய்தபோது வேலப்பன் பெயருடன் பிரதிவாதிகளின் பெயரும் இருந்தது. முன் உரிமையாளர் என்ற அடிப்படையில் தான் வேலப்பனின் பெயர் பிரதிவாதிகளின் பெயரும் பட்டாவில் இருந்திருக்கும் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.13 13:56:14 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.